**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 22-08-2024

SC.32/2023

அ.சா. - 4 வெங்கடகிருஷ்ணன்

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் வெங்கடகிருஷ்ணன் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி. சு. ஸ்ரீவித்யா, பி.காம். எம்.ஏ.பி.எல்., சார்பு நதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடகிருஷ்ணன் | தந்தை பெயர் | வெங்கட்டசாமி |
| வயது | 45 | கிராமம் | கிருஷ்ணம்மாகொத்தூர் |
| தாலுக்கா | ஓசூர் | மாவட்டம் | கிருஷ்ணகிரி |

**முதல் விசாரணை**

நான் கிருஷ்ணம்மாகொத்தூர் வசித்துக்கொண்டு விவசாயம் மற்றும் செய்து வருகிறேன். தேதி எனக்கு ஞாபகமில்லை சுமார் 4 வருடத்திற்கு முன்பு நான் ஊரில் இருந்தப்பொழுது காலை 8.30 மணியளவில் ஆஜர் எதிரிகளுக்கும் பசவராஜீவிற்கும் சண்டை ஏற்பட்டதாக கேள்விப்பட்டேன். அவர்களுக்குள் நில பிரச்சனை சம்பந்தமாக அவர்களுக்குள் சண்டை ஏற்பட்டது. நான் வெளியில் சென்று வந்தேன். மதியம் 12.00 மணியளவில் போலீசார் வந்தார்கள். சம்பவம் நடந்த இடத்திற்கும் பக்கத்தில் உள்ள பூமி என்னுடையது தான். நான் பக்கத்தில் மாடு மேய்த்துக்கொண்டிருந்தபோது போலீசார் அங்கு இருந்தார்கள் நான் என்னவென்று பார்க்க நான் சென்றேன் போலீசார் சம்பவயிடத்தில் ஏதோ வரைப்படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் அவர்கள் தயார் செய்த அந்த காகிதத்தில் என்னை சாட்சி கையொப்பம் நானும் மனிமாரனும் அதில் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. நான் தெலுங்கு தான் படித்துள்ளேன். பார்வைமகஜரில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் படித்து கூற இயலாது ஆனால் அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். படித்து பார்த்து தெரிந்துக்கொண்டு தான் கையொப்பம் செய்கிறேன் என்று அதில் உள்ளதா என்று கேட்டால் தெரியவில்லை, போலீசார் மேப் போட்டு வரைந்து அதைபற்றி எழுதி உள்ளதை என்னிடம் தெரியப்படுத்தி தான் கையொப்பம் வாங்கினார்கள். நானும் பசவராஜும் உறவினரா என்றால் ஆம். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் பார்வைமகஜர் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பசவராஜ் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு அனுசரனையாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் அது தவறு.



R SRIVIDYA Digitally signed by R SRIVIDYA Date: 2024.08.22 13:41:03 +0530